மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 12ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண்.04/2021
உள்
அசல் வழக்கு எண்.58/2019
-------------

ஜெகதீஷ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சந்திரபோஸ்
2. சந்தனக்குமார்
3. சார் பதிவாளர்
   சாத்தூர்
4. மாவட்ட பதிவாளர்
   விருதுநகர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

5. தமிழக அரசுக்காக
   மாவட்ட ஆட்சியர்
   விருதுநகர் ... 5ம் எதிர்மனுதாரர்கள்/
   5ம் உத்தேச பிரதிவாதி

இந்த மனு 29.10.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 30.06.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 3, 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், 5ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதி தரப்பில் அரசுப்பணிகள் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரரதிவாதி தோன்றா தரப்பினராகியும், 1ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா அசல் வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகரை இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி 29.10.2021ம் தேதி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் தபசில் சொத்தினைப் பொறுத்து 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் 03.09.2009ம் தேதிய ஆவண எண்.8157/2009ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி கிரைய பத்திரத்தை 3ம் பிரதிவாதி ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கும்பொருட்டும் 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும், தபசில் சொத்துக்களை மனுதாரர் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1, 2 பிரதிவாதிகளோ, அவர்தம் வகையாட்களே எவ்வித இடைஞ்சலும். எவ்வகையிலும் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாதென அவர்களுக்கு ஒரு நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும் நீதிமன்றத்தில் தாவா அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தாவா அசல் வழக்கு 3ம் பிரதிவாதி சார்பதிவாளர், சாத்தூருக்கு எதிராக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளபடியால் 4ம் பிரதிவாதியன மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்த்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி 3, 4 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் மேற்படியார்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அவர்களுக்கு எதிராக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற வேண்டியுள்ளபடியால், அரசினை தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளது. அதன்பொருட்டு இவ்வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டத்தை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியுள்ளது. மேற்படி 5ம் பிரதிவாதியாக தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர்,விருதுநகரை தாவா

வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்தாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே தாவா அசல் வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டத்தை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி 29.10.2021ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). 3, 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், 5ம் உத்தேச எதிர்மனுதாரர்/ உத்தேச பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-**

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் ஏற்கெனவே 3, 4 பிரதிவாதிகளாக கட்சியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மாவட்ட ஆட்சியரை வழக்கில் சேர்க்க வேண்டுமென்பது தெரிந்திருந்தும், வேண்டுமென்றே கட்சியாக சேர்க்காமல் இருந்துவிட்டு தற்போது சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. எனவே, மனுதாரர் அசல் வழக்கினை காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவே மனு தாக்கல் செய்துள்ளதால், மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**8). தீர்வு:-**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல்

செய்யப்பட்டிருக்கும் எதிர்உரைகளும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா அசல் வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகரை இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி 29.10.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போயும், அவசிய தரப்பினர்களை தரப்பினர்களாக சேர்க்காத தோஷத்திற்கு ஆளாகக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர் அதனால் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு தாவா அசல் வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகரை இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி 29.10.2021ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜுலை திங்கள் 12ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.